பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

22 07 2026 WEDNESDAY 6 30 PM

வணக்கம்-மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மருத்துவத் துறையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு கொண்டு வந்துள்ள திட்டங்கள் உலக அளவில் வரவேற்பை பெற்றுள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

- பொங்கல் பண்டிகைக்கு வேட்டி, சேலை வழங்கும் திட்டத்திற்கான பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக மாநில அமைச்சர் திரு. விஜய் பாலாஜி தெரிவித்துள்ளார்.

- தமிழகத்தில் இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் 10வது நேரடி ஆதார் சேவை மையம் இன்று தஞ்சாவூரில் தொடங்கப்பட்டது.

- அரிசி விலை உயர்வை கட்டுப்படுத்த மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக வலியுறுத்தியுள்ளது.

- சீன ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவை 2047ஆம் ஆண்டிற்குள் உருவாக்குவதற்கு சுகாதாரத் துறையில் வெற்றி காண வேண்டும் என்று குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

கோவையில் இன்று தனியார் செவிலியர் கல்லூரி திறப்பு விழாவில் கலந்து கொண்ட பேசிய அவர், மருத்துவத் துறையில் மத்திய அரசு கொண்டு வந்துள்ள பல்வேறு சிறப்பான திட்டங்கள் உலக அளவில் வரவேற்பை பெற்றுள்ளதாக கூறினார்.

(சவுண்ட் பைட் - சி.பி.ஆர் 58 செகண்ட்ஸ்)

இந்நிகழ்ச்சியில் பேசிய தமிழக ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர், செவிலியர் பணி நமது கலாச்சாரத்தின் ஒரு அங்கமாக உள்ளதாக குறிப்பிட்டார்.

மனித சேவையில் உயர்ந்த சேவையாக செவிலியர் பணி கருதப்படுவதாக ஆளுநர் கூறினார்.

>>>>>><<<<<<

பொங்கல் பண்டிகைக்கு விநியோகிக்கப்படும் வேட்டி, சேலைகள் தயார் செய்யும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருவதாக மாநில கைத்தறித்துறை அமைச்சர் திரு. விஜய் பாலாஜி தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒப்பந்த முறையில் பணியாற்றும் தூய்மைப்பணியாளர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்ற கோரிக்கை குறித்து அரசு பரிசீலித்து முடிவெடுக்கும் என்று கூறினார்.

மாநிலத்தில் ஆவின் பால் தட்டுப்பாடு தொடர்பாக அந்த துறைக்கான அமைச்சர் ஆய்வு செய்து வருவதாகவும், இது விரைவில் சரி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சென்னிமலையில் தேக்கமடைந்துள்ள 100 கோடி ரூபாய் மதிப்பிலான படுக்கை விரிப்புகளை கொள்முதல் செய்வது குறித்து, ஆய்வு செய்யப்பட்டு வருவதாகவும் திரு. விஜய் பாலாஜி கூறினார்.

>>>>>><<<<<<

நடப்பு நிதியாண்டில் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு 550 கோடி ரூபாய் கடனுதவி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு. மதன்ராஜா தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்ட தொழில் மையத்தில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த நிதியாண்டில், 400 கோடி ரூபாய் தொழில்கடன் வழங்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட பசுந்தேயிலைக்கான நிலுவைத்தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மதன்ராஜா 47 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

தூய்மைப் பணியாளர்களின் ஆரோக்கியத்தை பாதுகாக்கவும், வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மாநில தொழில்துறை அமைச்சர் செல்வி கீர்த்தனா தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம், சிவகாசி மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு அரசு சேவைகள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கிப் பேசிய அவர், தூய்மைப் பணியாளர்களுக்கு உறுப்பினர் அட்டை பதிவு செய்யவும், சமூகநலத்துறையின் மூலம் குடும்பநல நிதியுதவி பெறுவதற்கும் வசதி ஏற்படுத்தி தரும் வகையில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் கூறினார்.

காஞ்சிபுரம் மற்றும் நாமக்கல் மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அரசு சேவைகளைப் பெறுவதற்கான சிறப்பு முகாம்கள் மாநில அரசின் சார்பில் இன்று நடைபெற்றன.

>>>>>><<<<<<

காசநோய் இல்லாத தமிழகத்தை உருவாக்குவதற்கான செயல்பாடுகள் குறித்து மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ், சென்னையில் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்ட காசநோய் தடுப்பு துணை இயக்குநர்கள் கலந்து கொண்ட இந்த ஆய்வு கூட்டத்தில், மாவட்டம் வாரியாக காசநோய் நோய் ஒழிப்பு திட்டத்தில் அடைந்துள்ள சாதனைகள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்து அவர் கேட்டறிந்தார்.

கடந்த 2025ஆம் ஆண்டில், 2 ஆயிரத்து 390 கிராம பஞ்சாயத்துகள் காசநோய் இல்லா பஞ்சாயத்துகளாக உறுதி செய்யப்பட்டுள்ளதாக இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

>>>>>><<<<<<

தமிழகத்தில் இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் 10வது நேரடி ஆதார் சேவை மையம் இன்று தஞ்சாவூரில் தொடங்கப்பட்டது

இதில் புதிய ஆதார் பதிவு, விவரங்கள் புதுப்பிப்பு, பயோமெட்ரிக் பதிவு மற்றும் புதுப்பிப்பு உள்ளிட்ட சேவைகளும், ஆதார் தொடர்பான குறைதீர்ப்பு சேவைகளும் ஒரே இடத்தில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - நந்தகோபால் 42 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

அரிசி விலை உயர்வை கட்டுப்படுத்த மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரிசி விலை உயர்வால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

அடுத்த சில மாதங்களில் அரிசி வரத்து குறையும் என்பதை கருத்தில் கொண்டு, சிலர் செயற்கையான விலை உயர்வை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரிசி ஆலைகள், மொத்த வணிகர்கள் ஆகியோரிடம் இருப்பில் உள்ள அரிசியில் 20 விழுக்காட்டை, அரசே கொள்முதல் செய்து நியாய விலைக் கடைகள், கூட்டுறவு விற்பனை அங்காடிகள் மூலம் குறைந்த விலையில் விற்பனை செய்ய முன்வர வேண்டும் என்று டாக்டர் அன்புமணி ராமதாஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

தூத்துக்குடி மாவட்டத்தில் மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027-க்கான கையெழுத்து இயக்கத்தை முதன்மை மக்கள்தொகை கணக்கெடுப்பு அலுவலரும், ஆட்சியருமான திரு. விஷ்ணு மஹாஜன் தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

திருவாரூர் மாவட்டத்தில் நடப்பாண்டு குறுவை நெற்பயிர் காப்பீட்டுக்கான காலவரம்பு வரும் 31ஆம் தேதி முடிவடையவுள்ள நிலையில், விவசாயிகள் காப்பீடு செய்து பயனடையுமாறு ஆட்சியர் திரு. மோகனச்சந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

வேலூர் மாவட்டம், அடுக்கம்பாறையில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இளநிலை பட்டமளிப்பு விழா, ஆட்சியர் திருமதி. லீலா அலெக்ஸ் தலைமையில் நடைபெற்றது.

>>>>>><<<<<<

சேலம் கோட்டை மாரியம்மன் கோவில் ஆடிப் பெருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

சீன ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-14, 9-21, 21-10 என்ற செட்கணக்கில் Unnati Hooda-வை வென்றார்.

>>>>>>END<<<<<<